# யூன் – 07 - புதன்
## புனித ஜெம்மானுஸ்
### கடவுளே, உம்மில் நம்பிக்கை கொள்கிறேன்: நான் வெட்கமுற விடாதேயும்: திபா. 25:2

## முதல் வாசகம் : தோபித்து 3 : 1- 11, 16 – 17

அக்காலத்தில் தோபித்து கூறியது: "நான் மனம் வெதும்பி அழுது புலம்பினேன் தேம்பியவாறு மன்றாடத் தொடங்கினேன். "ஆண்டவரே, நீர் நீதியுள்ளவர். உம் செயல்களெல்லாம் நேரியவை. உம் வழிகள் அனைத்திலும் இரக்கமும் உண்மையும் விளங்குகின்றன. நீரே உலகின் நடுவர். இப்பொழுது, ஆண்டவரே, என்னை நினைவுகூரும் என்னைக் கனிவுடன் கண்ணோக்கும். என் பாவங்களுக்காகவும் குற்றங்களுக்காகவும் என் மூதாதையருடைய பாவங்களுக்காகவும் என்னைத் தண்டியாதீர். என் மூதாதையர் உமக்கு எதிராகப் பாவம் செய்தார்கள். உம் கட்டளைகளை மீறினார்கள். எனவே நாங்கள் சூறையாடப்பட்டோம், நாடு கடத்தப்பட்டோம், சாவுக்கு ஆளானோம். வேற்று மக்களிடையே எங்களைச் சிதறடித்தீர் அவர்களுடைய பழிச்சொல்லுக்கும் நகைப்புக்கும் இகழ்ச்சிக்கும் எங்களை உள்ளாக்கினீர். என் பாவங்களுக்கு நீர் அளித்த தீர்ப்புகள் பலவும் உண்மைக்கு ஏற்றவை. நாங்கள் உம் கட்டளைகளின்படி ஒழுகவில்லை உம் திருமுன் உண்மையைப் பின்பற்றி வாழவில்லை. இப்பொழுது, உம் விருப்பப்படி என்னை நடத்தும் என் உயிர் பிரிந்துவிடக் கட்டளையிடும். இவ்வாறு நான் மண்ணிலிருந்து மறைந்து மீண்டும் மண்ணாவேனாக. நான் வாழ்வதினும் சாவதே மேல் ஏனெனில் சற்றும் பொருந்தாத பழிச்சொற்களை நான் கேட்க நேர்ந்தது. ஆகவே கடுந்துயரில் மூழ்கியுள்ளேன். ஆண்டவரே, இத்துயரத்தினின்று நான் விடுதலை பெற ஆணையிடும் முடிவற்ற இடத்திற்கு என்னைப் போகவிடும் உமது முகத்தை என்னிடமிருந்து திருப்பிக் கொள்ளாதேயும் ஆண்டவரே! வாழ்வில் மிகுந்த துன்பங்களைக் காண்பதினும், இத்தகைய இகழ்ச்சிகளைக் கேட்பதினும் நான் சாவதே மேல். அதே நாளில் மேதியா நாட்டின் எக்பத்தானா நகரில் வாழ்ந்துவந்த இரகுவேலின் மகள் சாரா, தன் தந்தையின் பணிப்பெண்களுள் ஒருத்தி தன்னைப் பழித்துரைத் ததைக் கேட்க நேரிட்டது. ஏனெனில் ஒருவர் இறந்தபின் ஒருவராக அவள் ஏழு ஆண்களை மணந்திருந்தாள். மனைவிகளுக்குரிய மரபுப்படி அவளுடைய கணவர்கள் அவளுடன் கூடிவாழுமுன் கொடிய அலகையான அசுமதேயு அவர்கள் எல்லாரையும் கொன்றுவிட்டது. இதனால் அந்தப் பணிப்பெண் அவளிடம், "நீயே உன் கணவர்களைக் கொன்றவள். நீ கணவர்கள் எழுவரை மணந்திருந்தும் அவர்களுள் எவருடைய பெயரும் உனக்கு வழங்கவில்லை. உன் கணவர்கள் இறந்துவிட்டதற்காக எங்களை ஏன் தண்டிக்கிறாய்? நீயும் அவர்களிடம் போ. உன் மகனையோ மகளையோ நாங்கள் என்றுமே காணவேண்டாம்" என்று பழித்துரைத்தாள். அன்று அவள் மனத் நொந்து அழுதாள் தன்னைத் தூக்கிலிட்டுக் கொள்ளும் நோக்குடன் தன் தந்தையின் மாடியறைக்குச் சென்றாள். ஆனால் மீண்டும் சிந்தித்து, "என் தந்தையை மக்கள் பழிக்கலாம் "உனக்கு ஒரே அன்பு மகள் இருந்தாள் அவளும் தன் துயர் பொறுக்க இயலாமல் நான்றுகொண்டாள்" என்று இகழலாம். இவ்வாறு என் தந்தை தமது முதுமையில் துயருற்று இறக்க நான் காரணம் ஆவேன். எனவே நான் நான்று கொள்ளமாட்டேன். மாறாக நான் சாகுமாறு ஆண்டவரை இரந்து வேண்டுவேன். அவ்வாறாயின் என் வாழ்நாளில் பழிச்சொற்களை இனிமேல் கேட்க வாய்ப்பு இராது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். அதே நேரத்தில் சாரா பலகணியை நோக்கிக் கைகளை விரித்துப் பின்வருமாறு மன்றாடினாள் "இரக்கமுள்ள இறைவா போற்றி! என்றும் உம் திருப்பெயர் போற்றி! உம் செயல்களெல்லாம் உம்மை என்றும் போற்றுக! அந்நேரமே தோபித்து, சாரா ஆகிய இருவருடைய மன்றாட்டும் கடவுளின் மாட்சியுடைய திருமுன் கேட்கப்பட்டது. தோபித்து தம் கண்களினால் கடவுளின் ஒளியைக் காணும்பொருட்டு அவருடைய கண்களிலிருந்து வெண்புள்ளிகளை நீக்கவும், தம் மகன் தோபியாவுக்கு இரகுவேலின் மகள் சாராவை மணமுடித்து, அசுமதேயு என்னும் கொடிய அலகையை அவளிடமிருந்து விரட்டவும், இவ்வாறு அவர்கள் இருவருக்கும் நலம் அருள இரபேல் அனுப்பப்பட்டார். சாராவை அடைய மற்ற அனைவரையம்விட தோபியாவுக்கே முன்னுரிமை இருந்தது. தோபித்து முற்றத்திலிருந்து வீட்டிற்குள் வந்தார். அதே நேரத்தில் இரகுவேலின் மகள் சாராவும் மாடியிலிருந்து இறங்கி வந்தாள்"

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மை நோக்கி என் உள்ளத்தை உயர்த்துகிறேன்

## நற்செய்தி : மாற்கு 12 : 18 – 27

அக்காலத்தில் உயிர்த்தெழுதல் இல்லை என்னும் கருத்துடைய சதுசேயர் இயேசுவை அணுகி, "போதகரே, ஒருவர் மகப் பேறின்றித் தம்மனைவியை விட்டுவிட்டு இறந்துபோனால், அவரைக் கொழுந்தனே மனைவியாக ஏற்றுக்கொண்டு சகோதரருக்கு வழிமரபு உருவாக்கவேண்டும் என்று மோசே நமக்கு எழுதி வைத்துள்ளார். சகோதரர் எழுவர் இருந்தனர். மூத்தவர் ஒரு பெண்ணை மணந்து மகப்பேறின்றி இறந்தார். இரண்டாமவர் அவரை மணந்து அவரும் மகப்பேறின்றி இறந்ததார். மூன்றா மவருக்கும் அவ்வாறே நிகழ்ந்தது. ஏழுபேருக்கும் மகப்பேறு இல்லாமற்போயிற்று. அனைவருக்கும் கடைசியாக அப்பெண்ணும் இறந்தார். அவர்கள் உயிர்த்தெழும்போது, அவர் அவர்களுள் யாருக்கு மனைவியாக இருப்பார்? ஏனெனில் எழுவரும் அவரை மனைவியாகக் கொண்டிருந்தனரே!" என்று கேட்டனர். அதற்கு இயேசு அவர்களிடம், "உங்களுக்கு மறைநூலும் தெரியாது, கடவுளின் வல்லமையும் தெரியாது. இதனால்தான் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள். இறந்து உயிர்த்தெழும்போது யாரும் திருமணம் செய்து கொள்வதில்லை. மாறாக அவர்கள் விண்ணகத் தூதரைப்போல் இருப்பார்கள். இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுவதைப்பற்றி மோசேயின் நூலில் முட்புதர் பற்றிய நிகழ்ச்சியில் இவ்வாறு வாசித்ததில்லையா? "ஆபிரகாமின் கடவுள் ஈசாக்கின் கடவுள் யாக்கோபின் கடவுள் நானே" என்று கடவுள் அவரிடம் சொன்னாரே! அவர் இறந்தோரின் கடவுள் அல்ல் மாறாக, வாழ்வோரின் கடவுள். நீங்கள் தவறான கருத்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று கூறினார்.

**தியானம்:** இன்றைய வாசகங்கள் எமது பாவங்களினால் பல வகையான சோதனைகளை, துன்பங்களை வருவித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இவற்றிலிருந்து எப்படி விடுதலை பெற முடியும் என்பதை மறந்து விடுகின்றோம். அன்று தோபித்து பலவிதமான துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவித்தவர் தாங்கமுடியாமல் தனது உயிரை எடுத்துவிடும் படியாக இறைவனிடம் மன்றாடினார். இருப்பினும் ஆண்டவரால் தான் விடுதலை தர முடியும் என்று விசுவசித்து கண்ணீரோடு மனம் வருந்தி மன்றாடினார். இறைவனும் அவரது கண்ணீருக்கு பதில் கொடுத்தார். அதே போன்று இரகுவேலின் மகள் சாரா ஏழு ஆண்களை மணம் முடித்து, அவர்கள் கூடி வாழும் முன்பு கொடிய அலகையினால் அவர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக கொல்லப்பட்டார்கள். அவர்களைக் கொன்றது இவள்தான் என்று தந்தையின் பணிப்பெண் பழித்துரைத்ததன் நிமித்தம் தாங்கமுடியாது, இருப்பதைவிட இறப்பது நல்லது என்று முடிவெடுத்தாள். தன் தந்தையை நினைத்து தனது முடிவை மாற்றியவளாய் இறைவனிடம் கண்ணீரோடு மன்றாடினாள். இறைவனும் அவளுக்கு ஏற்பட்ட துன்பங்கள், பழிப்புரைகள் யாவற்யையும் நீக்கி விடுதலை கொடுத்தார். எம்மத்தியிலும் கூட பலவிதமான கஷ்டங்கள், துன்பங்கள், பழிப்புரைகள் அவற்றின் மூலம் மன அழுத்தங்கள், சோர்வுகள், நம்பிக்கை தளர்வுகள் காணத்தான் செய்கின்றன. இதற்காக எம்மையே அழிக்கும் அளவிற்கு நம்பிக்கையில் தளர்வுறாமல் எமக்கு ஏற்படும் யாவற்றையும் இறைவனிடம் மனம் வருந்தி கண்ணீருடன் மண்றாடுவோம். அவரும் எமது கண்ணீருக்கு பதில் தருவார். "கண்ணீரோடு விதைப்பவர்கள் கம்பீரத்தோடே அறுவடை செய்வார்கள்" இவ்வாறாக திருப்பாடலில் நாம் பார்க்கின்றோம். மேலும் இவ்வுலகை விட்டுப் பிரிந்தவர்கள் வானதூதர்களாக இறைவன் மத்தியில் அமர்ந்திருப்பார்கள், வாழ்வோரின் கடவுளாகிய இறைமகன் இயேசு எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும், இல்லத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். "அவர் இறந்தோரின் கடவுள் அல்ல மாறாக வாழ்வோரின் கடவுள்." (மாற்.12:27) எனவே இதை விசுவசித்து எமது சொல்லும், செயலும் இறைவனுக்கு ஏற்றவையாக இருக்க பாவங்களிலிருந்து விடுதலை பெற்று புதுவாழ்வு வாழ எங்களைத் தயாபடுத்துவோம்.